ශ්‍රී ලංකා ... සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE PUBLISHED IN THE WEBSITE DOE

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018**

Efficiency Bar Examination for Officers in Class 2 of Sri Lanka Principals' Service - 2018

**(01)** பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை
School Administration and Supervision

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1.** பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் **சுருக்கமான விடை** எழுதுக.

(i) தொழிற்படு வகுப்புக்களினதும் பாடத் தொகுதிகளினதும் அடிப்படையில் இலங்கையின் அரச பாடசாலைகளின் வகைகள் **நான்கைப்** பெயரிடுக.

(ii) பாடசாலை நேரசூசியினை தயாரிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்படும் ஆசிரியர் தகவல் தொடர்பான விபரங்கள் **நான்கு** எழுதுக.

(iii) பாடசாலை மட்டத்தில் கொள்முதல் செயன்முறைக்காக பாடசாலையினுள் உருவாக்கப்பட வேண்டிய குழு எதுவாகும் எனக் குறிப்பிடுக.

(iv) பாடசாலை மற்றும் அது தொடர்பான உள்ளக மற்றும் வெளியக தரப்பினர் தலா **இருவர்களைப்** பெயரிடுக.

(v) பாடசாலை மற்றும் சமூகத்திற்குமிடையில் உள்ள தொடர்பினை மேம்படுத்துவதற்கு பாடசாலை மூலமாக செயற்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(vi) பாடசாலை அதிபரொருவரினால் விருத்தி செய்து கொள்ள வேண்டிய முகாமைத்துவ திறன்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(vii) பாடசாலையின் உள்ளக மேற்பார்வைக்காக பயன்படுத்தக்கூடிய நுட்பமுறைகள் **நான்கு** எழுதுக.

(viii) மாணவ முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை அதிபருக்கு உள்ள பொறுப்புக்கள் **நான்கு** குறிப்பிடுக.

(ix) பாடசாலைமட்ட முகாமைத்துவம் தொடர்பான பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலையின் தேவைகளுக்கு ஏற்ப அமைக்கக்கூடிய உப குழுக்கள் **நான்கைப்** பெயரிடுக.

(x) ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியுடன் தொடர்புபட்ட கலைத்திட்டத்தின் (ஆரம்ப கல்வி கலைத்திட்டம் மற்றும் இடைநிலைக் கலைத்திட்டம்) பிரதான பண்புகள் தலா **இரண்டு** எழுதுக.

*(04 × 10 = 40 புள்ளிகள்)*

**2.** (i) பாடசாலை மட்ட கணிப்பீட்டு செயற்பாடுகளை பாடசாலைக்குள் நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலை அதிபரினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை குறிப்பிடுக.

(ii) "பாடசாலை மட்ட கணிப்பீடு என்பதானது மற்றுமொரு எழுத்துப் பரீட்சையல்ல."
இதன்படி கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கணிப்பீட்டுக்காக பயன்படுத்தக்கூடிய பல்வேறு செயற்பாடுகளில் **ஐந்தைப்** பெயரிடுக.

(iii) ஆசிரியரினால் பாடசாலை மட்டத்தில் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு பாடசாலை அதிபர் என்ற வகையில் நீர் அவை குறித்து தேவையான வழிகாட்டல்களை வழங்க வேண்டியது முக்கியமாகும். செயற்றிட்டமொன்றில் உள்ளடங்கி இருக்க வேண்டும் எனக் கருதுகின்ற விடயங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

**3.** (i) 'மேற்பாவை இடம்பெறுவதானது குறைபாடுகளை கண்டறிவதற்கே ஆகும்' என்ற எதிர்மறையான மனப்பாங்கை விட்டும் நீங்கி பாடசாலைக் கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரமாணங்கள், நோக்குகள், நியம அடிப்படையிலான மதிப்பீட்டு செயன்முறைகள் பற்றி சுருக்கமாக விளக்குக.

(ii) அம்மதிப்பீட்டு செயன்முறையில் உள்ளடங்கும் எட்டு மதிப்பீடுகளில் **ஐந்தைப்** பெயரிடுக.

(iii) உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளை செயற்படுத்தும் போது பாடசாலையொன்றின் வகிபங்குகள் (பாடசாலை மட்ட நடவடிக்கைகள்) எவை எனக் குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

**4.** (i) "பாடசாலையினுள் திருப்திகரமான மனநிலை கொண்ட ஆசிரியர் குழாமொன்று இருப்பதானது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எளிதாக அடைந்து கொள்வதற்கு முடியுமாக இருக்கும்."
ஆசிரியர்களிடம் திருப்தி நிலையினை ஏற்படுத்துவதற்காக அதிபர் என்ற வகையில் நீங்கள் பின்பற்றக் கூடிய முறைகள் **ஐந்தினை** எழுதுக.

(ii) ஆசிரியர் நலனோம்பலுக்காக பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ள முடியுமான சேவைகள் **மூன்றைப்** பெயரிட்டு, ஆசிரிய நலனோம்பலில் உள்ள நன்மைகள் **இரண்டு** எழுதுக.

(iii) ஆசிரியர்களின் வாண்மைசார் விருத்தித் தேவைகளுக்கு ஏற்ப / ஆசிரியர் விருத்தி தேவைகளுக்கு ஏற்ப பாடசாலை மட்ட நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படும் போது அதிபரினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை எனக் குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

**5.** (i) பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் கீழ் பாடசாலை மட்டத்தில் ஒருமித்த தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றின் செல்வாக்கினை விளக்குக.

(ii) பாடசாலை முகாமைத்துவ குழுவின் கட்டமைப்பினைக் குறிப்பிடுக.

(iii) பாடசாலை முகாமைத்துவ குழுவின் வகிபங்குகளை சுருக்கமாகக் குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

**6.** (i) பாடசாலைக்கு கிடைக்கின்ற பொருட்களை பொருட் பதிவேட்டில் குறித்து வைக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் **ஐந்து** குறிப்பிடுக.

(ii) பொருட் பதிவேட்டில் இருந்து பொருட்களை நீக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை எனக் குறிப்பிடுக.

(iii) பொருட் பதிவேட்டினை ஒப்பிடும் முறையினை சுருக்கமாகக் குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

**7.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொன்றுக்கும் இடையில் உள்ள **வேறுபாடுகளை** உதாரணங்களுடன் விளக்குக.

(i) முழுக் கலைத்திட்டம் மற்றும் இணைப்பாடவிதானம்

(ii) சந்தை விலை நிர்ணயிப்பு முறை மற்றும் நேரடி ஒப்பந்த முறை

(iii) அதிபரின் நிர்வாக மேற்பார்வை மற்றும் கற்றல் கற்பித்தல் மேற்பார்வை

(iv) தொடர் மதிப்பீடு மற்றும் இறுதி மதிப்பீடு

(v) அதிகாரத்துவ தலைமைத்துவ பாங்கு (சர்வதிகார தலைமைத்துவ பாங்கு) மற்றும் பங்குபற்றுகை தலைமைத்துவப் பாங்கு

*(03 × 5 = 15 புள்ளிகள்)*

***

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE ... THE WEB... ...

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான**
**வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018**
Efficiency Bar Examination for Officers in Class 2 of Sri Lanka Principals' Service - 2018

**(02)** பாடசாலைத் திட்டமிடல்
School Planning

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் **சுருக்கமான விடை** எழுதுக.

(i) பாடசாலை திட்டமிடலின் போது பங்குபற்றுகை முகாமைத்துவ அணுகுமுறை பயன்படுத்தப்படும். இந்த அணுகுமுறையின் கீழ் பாடசாலை திட்டமிடலை மேற்கொள்ளும் போது பங்குபற்றுகின்ற **நான்கு** தரப்பினர்களைக் குறிப்பிடுக.

(ii) பாடசாலைக்கான தூரநோக்கினை உருவாக்கும் போது அதில் காணப்பட வேண்டிய பண்புகள் **இரண்டைப்** பெயரிடுக.

(iii) அதிபரொருவருக்கு பாடசாலை மாணவர் தொடர்பாக தகவல்களை பெறுவதற்காக சேகரிக்கக்கூடிய தகவல்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

(iv) பாடசாலை மட்டத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளை செயன்முறைக்குட்படுத்தப்பட்ட பின்னர் தகவல்கள் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படக்கூடிய தகவல்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

(v) கல்வித்துறை அபிவிருத்தி உத்தி திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டம் (ESDSP) 2018 - 2025 என்பதன் கீழ் பாடசாலை மட்டத்தில் திட்டமிட அறிமுகம் செய்யப்பட்டுள்ள கருப்பொருட்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(vi) பாடசாலைகளில் வருடாந்த திட்டமிடலின் போது அதிபரினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **நான்கு** குறிப்பிடுக.

(vii) பாடசாலை திட்டமிடலை மேற்கொள்ளும் போது, சரியான குறிக்கோள்களை உருவாக்குதல் வேண்டும். இக்குறிக்கோள் "SMART" ஆக இருக்க வேண்டும். இங்கு ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்களினாலும் குறிப்பிடப்படும் கருத்தினைக் குறிப்பிடுக.

(viii) பிரதேச மட்டத்தில் பாடசாலை அபிவிருத்தியடைதல் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளாக உரிய பிரதேச மட்டத்தில் அபிவிருத்தியடையும் துறைகள் **நான்கு** குறிப்பிடுக.

(ix) வருடாந்த திட்டமிடலின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுகிறது. இச்செயற்றிட்டங்களில் உள்ளடங்கி இருக்க வேண்டிய **நான்கை** காரணிகளை குறிப்பிடுக.

(x) அபிவிருத்தியை மேற்கொள்பவர் எனும் வகையில் அதிபர் முகாமைத்துவ வகிபங்கையாற்ற வேண்டும். இவ் வகிபங்கின் பிரதான செயன்முறைகள் **நான்கு** குறிப்பிடுக.

*(04 × 10 = 40 புள்ளிகள்)*

**2.** (i) பங்குபற்றுகை அணுகுமுறையினைப் பயன்படுத்தி பாடசாலை மட்ட திட்டமிடலை மேற்கொள்கையில் அதிபரொருவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(ii) பாடசாலை மட்ட திட்டமிடல் எண்ணக்கருவானது, பாடசாலை மட்டத்தில் திட்டம் தயாரிக்கப்படும்போது பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் நடைபெறுவதில்லை எனப் பலர் கருதுகின்றனர். இதற்கான காரணங்களினை குறிப்பிட்டு விளக்குக.

(iii) பாடசாலை மட்ட திட்டமிடல் செயன்முறையினை செயற்படுத்துவதனூடாக கல்வி சமத்துவ (ஒப்புரவு) த்துக்கு பிரச்சினை ஏற்படும் நிலைமை ஏற்பட முடியுமா? காரணங்களுடன் விபரிக்குக.

*(15 புள்ளிகள்)*

**3.** (i) பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையில் தகவல்களை காட்டுகின்ற முறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(ii) பாடசாலைகளில் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமைகளை சரியாக செயற்படுத்தும் போது, அதிபர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(iii) "பாடசாலை திட்டமிடலை மேற்கொள்ள, கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை பாடசாலைகளில் செயற்படுத்துவது மிக முக்கியமாக உள்ளது." இக்கூற்றை காரணங்களுடன் விளக்குக.

*(15 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka

TO BE RETURNED IN THE WHOLE OF 2021

4. (i) திட்டமிடல் செயன்முறையில் பாடசாலையில் நிலவும் உண்மையான நிலமைகளை ஆராய வேண்டும். இதற்காக பயன்படுத்தப்படும் "SWOT" பகுப்பாய்வு முறையினை கவனத்திற் கொள்கின்ற துறைகள் **நான்கை** குறிப்பிடுக.

(ii) SWOT பகுப்பாய்வினைத் தவிர பாடசாலை நிலமைகளை பகுப்பாய்வு செய்வதற்காக பயன்படுத்தப்படும் நுட்ப முறைகள் **நான்கினைப்** பெயரிட்டு அவற்றில் **ஒன்றைத்** தெரிவு செய்து அது பாடசாலையில் எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது என்பதனை விவரிக்குக.

(iii) கல்வியின் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக செயற்றிட்டமொன்றை பரிந்துரை செய்து அது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் முறையை காண்ட் (Gantt) வரைபினைப் பயன்படுத்தி விவரிக்குக.

*(15 புள்ளிகள்)*

5. (i) அபிவிருத்தியின் தலைவர் என்ற வகையில் அதிபர் பாடசாலை திட்டமிடலை தயாரித்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாடசாலையில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். இந்த திட்டமிடலை வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ii) குறுங்கால மற்றும் நீண்டகால திட்டங்களுக்கு இடையில் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

(iii) "13 வருட சான்றிதழ்ப்படுத்தப்பட்ட கல்வியினை சகல மாணவர்களுக்கும் வழங்குவதன் மூலம் இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்." இக்கூற்றை காரணங்களுடன் விவரிக்குக.

*(15 புள்ளிகள்)*

6. (i) கல்வித்துறை அபிவிருத்தி உத்தி திட்டமிடலின் (ESDSP) (2018 - 2025) இரண்டாவது கருப்பொருளான அபிவிருத்திக்காக பாடசாலை மட்டத்தில் செயற்படுத்த முடியுமான செயற்றிட்டங்கள் **இரண்டு** குறிப்பிடுக.

(ii) மேலே குறிப்பிட்ட இரண்டு செயற்றிட்டங்களில் **ஒன்றிற்கான** குறிக்கோள்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) அதிபர் என்ற வகையில் பாடசாலையின் நல்லாட்சி எண்ணக்கருவிற்கு ஏற்ப முகாமைத்துவம் செய்யும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **மூன்றை** காரணங்களுடன் விவரிக்குக.

*(15 புள்ளிகள்)*

7. கீழே தரப்பட்ட சகல விடயங்களில் காணப்படும் தொடர்புத் தன்மையினை வெவ்வேறாக சுருக்கமாக விளக்குக.

(i) ஒரு வருடத்திற்காக செயற்படுத்தப்படும் திட்டமிடல் மற்றும் நிலைமாற்று திட்டமிடல்

(ii) தரவு மற்றும் தகவல்கள்

(iii) கல்வி குறிகாட்டிகள் மற்றும் திட்டமிடல் கண்காணிப்பு

(iv) வருடாந்த பாதீடு மற்றும் வருடாந்த திட்டமிடல்

(v) செயற்றிட்டம் மற்றும் காண்ட் வரைபு

*(03 × 5 = 15 புள்ளிகள்)*

* * *

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE ... IN THE ... BOX

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான**
**வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018**
Efficiency Bar Examination for Officers in Class 2 of Sri Lanka Principals' Service - 2018

**(03) கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள்**
Modern Trends and Practices of Education

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**1.** பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் சுருக்கமான விடை எழுதுக.

(i) புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்விச் செயலாளரின் 37/2017 ஆம் இலக்க மற்றும் 2017.09.20 திகதியிலான சுற்றுநிருபத்தின் படி செயற்படுத்தப்படும் பாட விடயங்களின் பிரதான அத்தொகுதிகளைப் பெயரிடுக.

(ii) பாடசாலை தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய தேர்ச்சி மாதிரி சட்டகப் பரப்பு (competency domain) எத்தனை உள்ளன? அப்பரப்புகளைப் பெயரிடுக.

(iii) பாடசாலையொன்றின் ஆசிரியர் தேவையினை தீர்மானிப்பதற்கு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தற்போது நடைமுறையில் உள்ள சுற்றுநிருபம் யாது? பாடசாலையொன்றில் ஆசிரிய தேவையினை தீர்மானிக்கும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் **மூன்றைப்** பெயரிடுக.

(iv) தற்போது நடைமுறையில் உள்ள கட்டாயக் கல்வி கட்டளையினை செயற்படுத்துவதற்கான அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது எந்த வருடத்தில் ஆகும்? அக்கட்டளையின் பிரகாரம் சகல பிள்ளைகளும் கட்டாயக் கல்விக்குட்படுத்தப்பட வேண்டிய வயதெல்லை யாது?

(v) 2017 ஆம் வருடத்தில் இலங்கை கல்விக்காக (பாடசாலைக் கல்வி மற்றும் உயர் கல்வி) மொத்த தேசிய உற்பத்தியில் (gross domestic product) ஒதுக்கப்பட்ட சதவீதம் யாது?

(vi) 2018 ஆம் வருடத்தில் இருந்து ஆசிரியர்களின் வாண்மை விருத்தியினை இலக்காகக் கொண்டு பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டத்தைப் பெயரிடுக.

(vii) சர்வதேச ரீதியாக கல்விப்புலத்தில் பிரதான பாட விடயங்களை ஒன்றிணைத்த வகையில் உலகளாவிய தேவைகளுக்கேற்பவும் தொழினுட்ப சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் ஆக்கத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டத்தைப் பெயரிடுக.

(viii) இலங்கை கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு நிதிசார் உதவிக்கடன் (credit) சலுகைக்கடன் வசதி (loan) ஆகியவற்றை வழங்குகின்ற பிரதான பல்துறைசார் விருத்தி பங்குதாரர் நிறுவனங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(ix) கல்விச் செயலாளரின் 2017 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதியிடப்பட்ட 44/2017 இலக்க சுற்றறிக்கை மூலம் சகல பாடசாலைகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 2018 - ஆம் வருடத்தின் பேண்தகு வாசிப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தைப் பெயரிடுக.

(x) கற்றல் அடைவுமட்டத்தை ஏற்படுத்துவதற்காகவும் கல்வியின் தரம், அங்கீகாரம், தரநிர்ணயம் ஆகியவற்றுக்காக புதிய கல்வி சீர்திருத்தங்களின் படி உருவாக்கப்பட விதந்துரைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

*(04 × 10 = 40 புள்ளிகள்)*

**2.** கல்வி மறுசீரமைப்பு மற்றும் மதிப்பீடும் கணிப்பீடும் தொடர்பாக தற்கால போக்கினை அடிப்படையாகக் கொண்டு மிகவும் பயனுறுதிவாய்ந்த கற்றல் கற்பித்தல் செயன்முறையினை வலுப்படுத்தும் நோக்கில் பாடசாலை மட்ட கணிப்பீடு (school based assessment) செயன்முறையானது 2017 ஆம் வருடத்தில் இருந்து புதியதொரு வடிவில் செயற்படுத்தப்படுகிறது.

(i) 'பாடசாலை மட்ட கணிப்பீடு' என்றால் என்ன என சுருக்கமாக விளக்குக. *(07 புள்ளிகள்)*

(ii) இக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை வினைத்திறனாக செயற்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் / நன்மைகள் எவை என சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

Department of Examinations Sri Lanka

**3.** கல்வி, பொருளாதார, மற்றும் சமூக ரீதியாக மாற்றமடையக் கூடியதும் விரைவாக அபிவிருத்தியடைகின்ற உலகத் தேவைகள் மற்றும் கேள்விகளுக்கேற்ப ஆசிரியர்களின் வகிபங்கு மாற்றமடைய வேண்டும் / விருத்தியடைய வேண்டும்.

(i) 21 ஆம் நூற்றாண்டின் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய திறன்கள் **மூன்றினை** சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(ii) ஆசிரியர்களுக்கு அத்திறன்களை மேம்படுத்துவதற்காக நீர் முன்வைக்கும் யோசனைகள் **மூன்றை** சுருக்கமாக விளக்குக. *(09 புள்ளிகள்)*

**4.** கற்றல் அடைவு மேம்படுத்துவதற்கு மற்றும் வளங்களை பயன்படுத்துகையில் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக பாடசாலை மட்ட முகாமைத்துவம் உதவி செய்கிறது.

(i) பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் அதிகமாக பயன்படுத்தப்படும் மாதிரியுருக்கள் (model) **நான்கை** பெயரிட்டு, **அவற்றிலொன்றை** சுருக்கமாக விளக்குக. *(07 புள்ளிகள்)*

(ii) பாடசாலை மட்ட முகாமைத்துவத்தினூடாக அடையக்கூடிய பிரதான நன்மைகள் **நான்கினை** சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

**5.** 2030 ஆம் ஆண்டில் பேண்தகு அபிவிருத்தியினை அடைதல் எனும் இலக்கின் கீழ் 4 வது குறிக்கோள் கல்வியை இலக்காகக் கொண்ட பல இலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(i) கல்விக்கான இலக்கு மூன்று பிரிவுகளினை உள்ளடக்கியுள்ளது. அந்த **மூன்று** இலக்குகளையும் குறிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

(ii) பேண்தகு அபிவிருத்தியின் 4 ஆவது இலக்கின் கீழ் கல்வியுடன் தொடர்புபட்ட வகையில் 2030 ஆம் வருடத்தில் அடைந்துகொள்ளவென இனங்காணப்பட்டுள்ள பிரதான நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக. *(09 புள்ளிகள்)*

**6.** மாணவரது கற்றல் அடைவு மட்டத்தை மேம்படுத்தல் மற்றும் சுய கற்றலுக்காக நவீன தொழினுட்பத்தினூடாக ஏற்படும் செல்வாக்குகள் தொடர்பாக விவாதத்துக்குரிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(i) நவீன தொழினுட்பம், டிஜிட்டல்மயப்படுத்தல் இலத்திரனியல் கற்றல் என்பனவற்றின் பாவனையின் மூலம் மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதில் உள்ள சாதகமான செல்வாக்குகள் **இரண்டினையும்** பாதகமான செல்வாக்குகள் **இரண்டினையும்** சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

(ii) நவீன தொழினுட்பம், டிஜிட்டல்மயமாக்கல், இலத்திரனியல் கற்றல் பாவனையின் மூலம் மாணவர்களின் அடைவு மட்டத்தினை அதிகரிக்க நீங்கள் கூறும் யோசனைகள் **மூன்றை** சுருக்கமாக விளக்குக. *(07 புள்ளிகள்)*

**7.** நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கினை அடைந்து கொள்வதில் அடிப்படையாக அமைவது கல்வியாகும்.

(i) நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை கல்வி முறைமையினூடாக கொண்டுவரப்பட்டுள்ள நடைமுறைகள் **மூன்றை** சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(ii) சமூக நல்லிணக்கம் மற்றும் ஐக்கியப்பாடு என்பனவற்றை நிலையான வகையில் கொண்டு செல்வதற்காக கல்வி முறைமையின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **மூன்றினை** சுருக்கமாக விளக்குக. *(09 புள்ளிகள்)*

* * *

Department of Examinations, Sri Lanka